# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/31 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12

*2088/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது இல.: 4/1/1/32/E.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2015/HW/69.*

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள், மற்றும் 2021/5 ஆம் இலக்க 2017.05.29 ஆந் திகதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட துண்டு இல. 29 ஆரம்பத் திட்ட வரைபடம் கு 2366 இல் நீக்கப்பட்டு பின்வரும் துண்டுகள் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் வட்டார இல.808, வெகரபென்த மற்றும் 836, தெலியாகொண்ண கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள அம்பலான்பிற்றிய கிராமத்தில் குருநாகல் மாவட்ட நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆரம்பத் திட்ட வரைபட இல. கு.2366 இல் 28.05.2018 திகதி குறிப்பிடப்பட்ட 0.5457 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 130 தொடக்கம் 131 வரையான காணித்துண்டுகள் 02 (இரண்டு) இன் விபரங்கள் பின்வருமாறு:

***துண்டு இல. 130***
காணியின் பெயர்: கொலபெலெல்லகந்தவத்த; விபரம்: தோட்டம் மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எஜ்.பி.என்.கே.பதிரன மற்றும் பி.எஸ்.பி.மொனரவில, இல. 79/18, கொழும்பு வீதி, குருநாகல்; விஸ்தீரணம்: 0.1029 ஹெக்டயார்.

***துண்டு இல. 131***
காணியின் பெயர்: கொலபெலெல்லகந்தவத்த; விபரம்: தோட்டம், கலப்புப் பயிர்ச்செய்கை மற்றும் நிரந்தரக் கட்டிடம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எம்.ரீ.நுவான் கேதல் பெரேரா, இல.115, கொழும்பு வீதி, திவுலபிற்றிய; விஸ்தீரணம்: 0.4428 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018.09.25 ஆந் திகதி குருநாகல் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018.10.08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசாரணைக்கு உரிமை கோருபவரினால் முகவராக அனுப்பப் படுபவர் உரிமை குறித்தொதுக்கப்பட்டமையை கடிதம் மூலமாக



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நிரூபிக்கப்படாவிட்டால் முகவராக அனுப்பப்படுபவரின் கூற்று அல்லது சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை குறித்து கவனம் செலுத்தவும்.

ஈ.எம்.எம்.எஸ்.ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
காணி எடுத்தல் அலுவலர்,
குருநாகல்.

பிரதேச செயலாளர்,
குருநாகல்,
2018, செத்தெம்பர் 10.

9 - 730

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4 /1/1/32 -E,147.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/HW/180.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியானது காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழ் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 2086/5 ஆம் இலக்க வர்த்தமானியில் பின்வருமாறு திருத்தியமைக்கப்படும் என பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

அதாவது காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய 2016/42 ஆம் இலக்க வர்த்த மானியில் அறிவிக்கப்பட்ட தொடர் இலக்கம் 169 நீக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 2086/5 ஆம் இலக்க வர்த்தமானியில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றேன்.

ஈ.எம்.எம்.எஸ்.ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
காணி எடுத்தல் அலுவலர்,
குருநாகல்.

பிரதேச செயலாளர்,
குருநாகல்,
2018, செத்தெம்பர் 10.

9 - 731

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.